# கைது செய்யப்பட்ட இளைஞன் உயிரிழந்ததையடுத்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் இருவருக்கு இடமாற்றம்





யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் இன்றைய தினம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இரும்பு பாதுகாப்பு வேலிகள் வீதியில் வைக்கப்பட்டும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் ஏனைய பொலிஸ் நிலையத்தில் இருந்து மேலதிகமாக வரவழைக்கப்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞனை பொலிஸார் கைது செய்து சித்திரவதைக்கு உட்படுத்தியதால்தான் இளைஞன் உயிரிழந்தார் என உறவினர்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில், பொலிஸார் தன்னை எவ்வாறு சித்திரவதை செய்தனர் எனக் கூறும் உயிரிழந்த இளைஞனின் காணொளி ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

இந்நிலையில் இளைஞனின் உறவினர்கள் , நண்பர்கள் ஊரவர்கள் மற்றும் பொதுமக்களைத் திரட்டி பாரிய போராட்டம் ஒன்றினை பொலிஸ் நிலைய பகுதியில் முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலையே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 04 திங்கட்கிழமை 20.11.2023 கதிர் 116

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## க.பொ.த (சா:.தர) பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியாகும்

க.பொ.த (சா/தர) பரீட்சை (2022) பெறுபேறுகள் இம் மாதம் இறுதியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை பரீட்சை திணைக்களம் மேற்கொண்டுள்ளது. விடைத்தாள்களை திருத்தும் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், அவற்றின் துல்லியத்தன்மை குறித்து ஆராயப்பட்ட பின்னர் பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சை திணைக்களத்தின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அநேகமாக இம்மாதம் மூன்றாம் வாரமளவில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் எனவும், பெறுபேறுகளின்படி

2 ▶

## கடுமையாக அடித்துத் துன்புறுத்தப்பட்டு நுரையீரல் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தார்

### சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் கடுமையாக அடித்துத் துன்புறுத்தப்பட்டதால் நுரையீரல் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தார், என்று சட்ட மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் இன்று நண்பகல் உடற்கூறுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இவ்வாறு அறிக்கையிடப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 25) என்பவரே சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்றைய தினம் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர்

2 ▶

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வாய்வுப் பணிகள் மீளவும் ஆரம்பம்





முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கை மீளவும் இன்று ஆரம்பிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கை கடந்த செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தது.

இதன்போது 17 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. அத்துடன் துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப்புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்கத் தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அகழ்வுப் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அது ஆரம்பிக்கப்படுமா என்ற சந்தேகம் பல்வேறு தரப்பினரிடமும் நிலவிய நிலையில் மீண்டும் இன்று காலை 10 மணியளவில் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழ்வுப் பணி முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2 ▶

## பிரித்தானியாவுக்கு சென்றுள்ள இலங்கை மருத்துவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

பிரித்தானிய சுகாதார சேவையில் இணைந்துள்ள வெளிநாட்டு மருத்துவர்களின் பட்டியலில் இலங்கை மருத்துவர்களும் முதல் ஐந்து இடங்களுள் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2021 ஆம் ஆண்டில், இலங்கையிலிருந்து 400 மருத்துவர்கள் பிரித்தானிய சுகாதார சேவையில் இணைந்துள்ள அதேவேளை, 2022 ஆம் ஆண்டில் இத்தொகை 500 ஐத் தாண்டியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, இந்த பட்டியலில் இடம்பிடித்துள்ள ஏனைய நாடுகள் இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் எகிப்து ஆகியனவாகும். லண்டன் நகரிலிருந்து ஒலிபரப்பாகும் பிபிசி சிங்கள வானொலி சேவை இந்த தகவலை தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு ஜூன் 1 தொடக்கம் 2023 மே 31 வரை, ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெந-33)

## இலங்கையில் கைத்தொழில்துறைக்கான Industry TV ehis அங்குரார்ப்பணம்

நாட்டில் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து செயற்படும் இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது, கைத்தொழில் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் எதிர்கால கைத்தொழில் துறை கருத்தாக்கத்திற்கு அமைவாக இலங்கையின் முதலாவது இலத்திரனியல் தொலைக்காட்சி அலைவரிசையான **Industry TV** தொலைக்காட்சி சேவையை உலகத் தொலைக்காட்சி தினமானமாகிய **(neht. 21)** நாளைய தினம் ஆரம்பிக்கவுள்ளது.

வெகுஜன ஊடகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் டொக்டர்

2 ▶

## நினைவேந்தலுக்குத் தடை நீதிமன்றால் நிராகரிப்பு

தெல்லிப்பளை மற்றும் அச்சுவேலிப் பொலிஸாரால் மாவீரர் நாள் நினைவேந்தலுக்குத் தடை கோரிய விண்ணப்பம் மல்லாகம் நீதிமன்றால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை மாவீரர் நினைவேந்தலை தடை செய்யக் கோரி கடந்த வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றத்தில் மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நாளை (21) வழங்கப் படவுள்ளது.

இதேநேரம் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடைவிதிக்கக் கோரிய பொலிஸாரின் விண்ணப்பம் கடந்த வாரம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றினா லும், நினைவேந்தலுக்குத் தடை கோரிய வல்வெட்டித் துறை பொலிஸாரின் கோரிக்கை கடந்த வெள்ளிக் கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தினாலும் நிராக ரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (04)

## வங்கியில் வைப்பிலிடச் சென்ற பணத்தில் இரண்டரை லட்சம் ரூபாய் களவாடப்பட்டது!

### பொலிஸார் எனக் கூறியோரின் கைவரிசை

கொழும்பு எல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள மதுபானச் சாலையொன்றில் இருந்து பத்து லட்சம் ரூபாவை வங்கியில் வைப்பிலிடுவதற்காக எடுத்துச் சென்றபோது, பொலிஸார் போல் வேடமணிந்த இருவர் குறித்த பணத்தில் இரண்டு இலட்சம் ரூபாவைக் கள வாடியுள்ளதாக நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மதுபானக் கடையின் ஊழியர் குறித்த பணத்தை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றதாகவும், மோட் டார் சைக்கிளை நிறுத்திய இருவர் தாம் பொலி ஸார் எனக் கூறி பொலிஸ் அடையாள அட்டையை காட்டி யதாகவும் தெரியவருகின்றது. ஊழியரைச் சோதனை செய்வதாக்க கூறி அவரிடம் இருந்த பணத்தை தருமாறு கூறிய அந்த நபர்கள் பணப்பையை சோதித்து விட்டு அதனை திருப்பிக் கொடுத்துள்ளனர்.

ஆனால், பணத்தை வங்கியில் வைப்பிலிடும்போது இரண்டரை லட்சம்ரூபாய்பணம்குறைவாக இருந்தமை தெரியவந்ததையடுத்து, உடனடியாக நாரஹேன்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது குறித்து பொலிசார் ஆராய்ந்தபோது, குறித்த மதுபானக் கடை ஊழியரிடம் பணப்பையை பெற்றுக் கொண்டவர்கள் அவருக்குத் தெரியாமல் அதிலிருந்து இரண்டரை லட்சம் ரூபாய் பணத்தைக் களவாடியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தி வரும் பொலி ஸார், இந்த இரண்டு நபர்களும் உண்மையில் பொலி ஸாரா அல்லது பொலிஸ் வேடம் தரித்த மோசடிப் பேர் வழிகளா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரி வித்துள்ளனர். (ரெந-30)

## கழுத்தில் தங்க நகை அணியாத பெண்ணை தாக்கிவிட்டு தப்பியோடிய கொள்ளைக் கும்பல்

வீதியில் நடந்து சென்ற பெண் சங்கிலி அணி யாததால் அவரைத் தாக்கி விட்டு வீதியில் தள்ளி விட்டு முகமூடிக் கொள்ளைக் கும்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் நேற்று நடை பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதா வது,

வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் வழி பாட்டை முடித்துக்கொண்டு தனது வீடு நோக்கி அந் தப் பெண் நடந்து செல்கையில் அவரை மோட்டார் சைக்கிள் ஒன்றில் தங்கள் முகங்களை மறைத்து துணியால் கட்டியவாறு பின் தொடர்ந்த இருவர் பெண் ணின் கழுத்தில் கை வைத்துள்ளனர்.

அதன்போதே அந்தப் பெண் கழுத்தில் தங்க நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை எனத் தெரிந்து கொண் டதும் பெண்ணைத் தாக்கி விட்டு வீதியில் தள்ளி விழுத்தி விட்டு முகமூடிக் கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். (அ)

## வயோதிபர் வீதியில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம் - நவாலி பகுதியில் இன்றையதினம் துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 70 வயதான அரு ளப்பு விமலதாஸ் என்ற முதியவரே நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் அருகில் உள்ள வீதியில் இன்று காலை மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (01)

## கொக்குத்தொடுவாய் மனிதப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகழ்வுப் பணி இடம்பெறுவதைப் பார்வையிட ஜனாதி பதியின் வடக்கு அபிவிருத்திக்குப் பொறுப்பான மேல திக செயலாளர் எல். இளங்கோவன் இன்று வருகை தந்திருந்தார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணாமல்போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் தற்பரன், சட்டத்தரணிக ளான வி.கே.நிறஞ்சன், கு.ஆன்சுமங்கலா மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிக ரன் உள்ளிட்ட தரப்பினரும் அங்கு பிரசன்னமாகியி ருந்தனர். (அ)

## இலங்கையில் கைத்தொழில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரமேஷ் பத்திரன, சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்- சர் சாமர சம்பத் தசநாயக்க மற்றும் வெகுஜன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார ஆகியோரின் பங்களிப் பில், கொழும்பு பொல்ஹேன்கொடவில் அமைந் துள்ள ஊடகத்துறை அமைச்சின் அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் காலை 9 ணிக்கு மேற்படி அங்குரார்ப்பண விழா நடைபெ- றவுள்ளது. (ரெந-31)

## கடுமையாக அடித்துத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக் கோட்டை பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டிருந் தனர். சந்தேக நபர்கள் இருவரும் நான்கு நாள்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்படவுமில்லை விடுவிக்கப்படவும் இல்லை என்பத னால் உறவினர்கள் அச்சமடைந்தனர்.

உயிரிழந்தவரின் தாயார் இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய் துள்ளார். அதனையடுத்து, சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கு பொலிஸ ாரின் ஆட்சேபணையையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டவேளை, ஒருவர் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறு பரிசோதனைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சவ அறையில் வைக்கப்பட்டிருந்தது. உடற்கூற்றுப் பரிசோ தனையின் பின்னரே உயிழப்புக்கான காரணம் வெளி யிடப்பட்டுள்ளது. (01)

## க.பொ.த (சாஃதர) பரீட்சை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியிலோ மாவட்ட மட்டத்திலோ பெறப் பட்ட இடங்கள் அறிவிக் கப்படமாட்டாது என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப் பிட்டுள்ளார். (ரெந-32)

## கைது செய்யப்பட்ட இளைஞன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஒரு விசாரணை முன்னெ டுக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணைக்கு ஏதுவாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தினால் பிறிதாக ஒரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (அ)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்



4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557



## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799



உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# மூதூர் லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலய மாணவருக்கு கற்றல் உபகரணங்கள், பாதணிகள் வழங்கும் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

திருகோணமலை மாவட்ட, மூதூர் கல்வி வலயத்தில் உள்ள கமு.மூ.லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதி கஷ்டக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தாமோதரம்பிள்ளை சதீஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று இடம்பெற்றது.

இப்பாடசாலையானது 1985 உள்நாட்டுக் கலவரக் காலப்பகுதி, அதனைத்தொடர்ந்து யுத்த காலப்பகுதியிலும் பாதிப்புக்கு உள்ளான பாடசாலையாகும்.

தற்போதும் இந்நிகழ்வு நடைபெற்ற பாடசாலை மண்டபத்தின் மேற்பகுதி சிதைவடைந்து, மழை காலங்களில் மழைநீர் வடிகின்ற அவல நிலையே காணப்படுகின்றது. இக்காலங்களில் மாணவர்களின் எந்த ஒரு நிகழ்வுகளும், பாடசாலையில் எனைய நிகழ் வுகளையும் அங்கு நடாத்துவதற்கும் முடியாதுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர், எமது பாடசாலையில் கல்விச் செயற்ப்பாட்டினை எடுத்துக்கொண்டால், சாதாரண தரத்திற்கு விஞ்ஞானம் மற்றும் கணித பாடத்திற்கான ஆசிரியர்கள் இதுவரையும் இல்லாமல் காணப்படுகின்றனர். சனி, ஞாயிறு மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் பிரத்தியோக ஆசிரியர்களைக் கொண்டே கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

சென்ற 2022 இல் சாதாரண தரப் பரீட்சைக்கு பாடசாலையில் இருந்து 11 மாணவர்கள் தோற்றி இருந்தனர். 11 மாணவர்களும் விஞ்ஞான பாடத்தில் 100 வீத சித்தியினையும் கணித பாடத்தில் 9 மாணவர்கள் ஏ தரச் சித்தியினையும் பெற்று முதூர் கல்வி வலயத்தில் முதற்தரப் பாடசாலையாக பெருமை சேர்த்தனர், என்று தெரிவித்தார்.

இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜருபன், சி.காந்தன், ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பாதணி மற்றும் புத்தகப்பை என்பனவற்றை வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் மூதூர்க் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். முசம்மில், ஆசிரிய ஆலோசகர் என்.எம். கலிலூர்ரகுமான், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய மொழிக் கல்வி சிங்கள பாடநெறிப் பயிற்சியும் சிங்களப் பாரம்பரிய உணவு முறைக் கண்காட்சியும்!



(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட இரண்டாம் மொழி - சிங்களப் பாடநெறிப் பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வும், சிங்களப் பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் கல்முனை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றன.

இந்நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டொக்டர் ஜெ.மதன், வைத்தியசாலை கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, வைத்தியசாலை தாதிய பரிபாலகர் என்.சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி. எல்.சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் தோமஸ் தேவஅருள், பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி. எஸ். சுகுமார், சுகாதார உதவியாளர்களின் மேற்பார்வையாளர் எஸ். ஜெயகுணம், வளவாளர்களான திருமதி. பி. சந்திரகுமாரி, திருமதி. எம். பி. ஆமினா, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்கள பயிற்சி பெற்ற அரச ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் நிகழ்வில், பயிற்சி பெற்ற ஊழியர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றதுடன் சிங்கள பாரம்பரிய உணவு முறை சார்ந்த கண்காட்சியும் இடம்பெற்றது.

நிகழ்ச்சியினை தமிழ் மொழியில் சுகாதார உதவியாளர் ந.சதீஸ்குமாரும் சிங்கள மொழியில் சுகாதார உதவியாளர் ரி. பிரசாந்தும் தொகுத்து வழங்கியிருந்தனர்.

# கரவட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிவைப்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு கரவட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் 18 மாணவர்களுக்கு கனடா நாட்டில் வசிக்கும் நிலு கோவிந் மற்றும் அமெரிக்காவில் வசிக்கும் சரணிகா பிரதீஷ் ஆகியோரது உதவியுடன் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன. பாடசாலையில் கல்வி பயிலும் கஷ்டப் பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கையினை மேம்படுத்துவதற்கும் வறுமை காரணமாக பாடசாலை இடை விலகலைத் தவிர்க்கும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# இரு முக்கியஸ்தர்களுடன் ரணில் இரகசிய சந்திப்பு

கொழும்பு அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவையும் இரகசியமாக அழைத்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்ற அந்தச் சந்திப்பு அரை மணி நேரத்துக்கும் மேலாகத் தொடர்ந்தது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் மூவரும் என்ன பேசினார்கள் என்ற தகவல் வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# இந்தியாவுடனான 100க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் மறுபரிசீலனை மாலைதீவின் புதிய அதிபர் தீர்மானமென உயரதிகாரி தகவலளிப்பு

இந்தியாவுடனான நூற்றுக்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களை மாலைதீவின் புதிய அரசு மறு ஆய்வு செய்யும் என அந்நாட்டு அரச உயரதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

மாலைதீவின் புதிய அதிபராக முகமட் மூயிஸ் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றார். அதிபராக பதவியேற்றவுடன் உரையாற்றிய அவர், 'மாலைதீவின் இறையாண்மை, சுதந்திரத்தைப் பாதுகாக்க அந்நிய நாட்டு ராணுவம் இல்லாத மாலைதீவாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

செப்டம்பரில் நடைபெற்ற அதிபர் தேர்தல் பிரசாரத்திலும் இந்திய ராணுவத்தை மாலத்தீவிலிருந்து வெளியேற்றுவதாக அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்தச் சூழலில், அதிபர் முகமட் மூயிஸை சனிக்கிழமை மரியாதை நிமித்தமாகச் சந்தித்த இந்திய மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜுவிடம் மாலைதீவில் இருந்து இந்தியா தனது ராணுவத்தை திரும்பப் பெறவேண்டும், என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில், செய்தியாளர் சந்திப்பில் பேசிய மாலைதீவின் அதிபர் அலுவலகத்தின் பொதுக் கொள்கைக்கான துணைச் செயலர் முகமட் பிரஸ்ல் அப்துல் கலீல், மருத்துவ மீட்புப் பணிகளுக்காக இந்தியா வழங்கிய முதல் ஹெலிகொப்டரை கையாள 24 வீரர்கள், டார்னியர் விமானத்தைக் கையாள 25 வீரர்கள், 2ஆவது ஹெலிகொப்டரை கையாள மேலும் 26 வீரர்கள், பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவில் 2 வீரர்கள் என மொத்தம் 77 இந்திய ராணுவ வீரர்கள் மாலைதீவில் உள்ளனர்.



அவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளை அதிபர் மூயிஸ் தொடங்கியுள்ளார்.

இந்தியாவுடன் உத்ரு திலா பஃல்ஹு துறைமுகத்துக்கான ஒப்பந்தம், பாதுகாப்புத் துறை ஒப்பந்தங்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களில் முந்தைய அரசு கையொப்பமிட்டுள்ளது. அந்த ஒப்பந்தங்கள் புதிய அரசால் மறு ஆய்வு செய்யப்படும், என்றார்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிறுத்தி, மாலைதீவில் நிலைகொண்டுள்ள இந்திய ராணுவ வீரர்களின் சரியான எண்ணிக்கையை வெளியிட முந்தைய அரசு மறுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2013 முதல் 2018 வரையில் அதிபராக இருந்த அப்துல்லா யாமீன் சீனாவுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். அதன்பிறகு இந்தியாவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட அதிபர் முகமட் சோலியை முகமட் மூயிஸ் தற்போதைய தேர்தலில் தோற்கடித்து அதிபராகி உள்ளார். அப்துல்லா யாமீனைப் போலவே முகமட் மூயிசும் சீனாவுக்கு ஆதரவாகவே செயல்படுவார் என்று கருதப்படுகிறது. (04)

# வீட்டு ஊழல் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் விடுவிப்பு



வீட்டு வசதித் திட்ட ஊழல் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், தற்காலிக அரசின் இரு அமைச்சர்கள் உள்ளிட்டோரை லாகூரில் உள்ள விசாரணை நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அந்நாட்டின் ஊழல் தடுப்பு முகமை பதிவு செய்த ஊழல் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி ஷாபாஸ் ஷெரீப், தற்காலிக அரசின் அமைச்சர்கள் பஃவாத் ஹாசன், அஹத் கான் சீமா உள்ளிட்டோர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை ஏற்றுக்கொண்ட நீதிபதி, வழக்கில் தண்டனை வழங்குவதற்கான முகாந்திரங்கள் எதுவும் இல்லை, எனக் கூறி அவர்களை விடுவித்தார்.

முன்னதாக, உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக் குறித்த அறிக்கையை ஊழல் தடுப்பு முகமையின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கடந்த ஆண்டு ஏப்ரலில், ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஷாபாஸ் ஷெரீஃப் பிரதமரானார். இவர், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் இளைய சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் லண்டனிலிருந்து நாடு திரும்பிய நவாஸ் ஷெரீஃப், நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடும் முனைப்பில் உள்ளார் எனத்தெரியவருகிறது. (04)

# தேர்தலில் போட்டியிட தடை விதிப்பு இஸ்லாமிய கட்சியின் மனு தள்ளுபடி

பங்களாதேஷின் மிகப் பெரிய இஸ்லாமியன் கட்சிக்கு தேர்தல் போட்டியிட விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்து, அது தொடர்பான மனுவை அந்நாட்டு உச்சநீதிமன்றம் ஞாயிற்றுக்கிழமை தள்ளுபடி செய்தது.

பங்களாதேஷின் மிகப் பெரிய இஸ்லாமிய கட்சியாக வங்கதேச ஜமாத்-ஏ-இஸ்லாம் விளங்குகிறது. இந்தக் கட்சி அந்நாட்டு அரசமைப்புச் சட்டத்தின் மதச்சார்பின்மைப் பிரிவுக்கு எதிராகச் செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பான வழக்கை அந்நாட்டில் உள்ள டாக்கா உயர்நீதிமன்றம் 2013 ஆம் ஆண்டு விசாரித்து, தேர்தலில் போட்டியிட அக்கட்சிக்குத் தடை விதித்தது.

இந்த உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அக்கட்சி மேல்முறையீடு செய்தது. அந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், அக்கட்சிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்து, அக்கட்சியின் மனுவை ஞாயிற்றுக்கிழமை தள்ளுபடி செய்தது. பங்களாதேஷின் நாடாளுமன்றத் தேர்தல் ஜனவரி 7 ஆம் திகதி நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்றார் நிகரகுவாவின் ஷென்னிஸ் பலாசியஸ்



நிகரகுவா நாட்டைச் சேர்ந்த ஷென்னிஸ் பலாசியஸ் என்ற பெண் 2023 ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்றுள்ளார்.

எல் சால்வடோர் நாட்டின் தலைநகர் சான் சால்வடாரில் உள்ள ஜோஸ் அடோல்ஃபோ அரங்கில் நேற்று நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியில் நிகரகுவா நாட்டைச் சேர்ந்த பெண் ஷென்னிஸ் பலாசியஸ் வெற்றி பெற்றார்.

ஷென்னிஸ் பலாசியஸ்க்கு 2022 ஆம் ஆண்டிற்கான பிரபஞ்ச அழகி பட்டம் வென்ற அமெரிக்காவின் கேஸ்ரீபியல் முடிசூட்டினார்.

72 ஆவது பிரபஞ்ச அழகிப் போட்டி எல் சால்வடோரில் நடைபெற்றது. இதில் சுமார் 90 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

சான் சால்வடொரில் நடைபெற்று வந்த இப்போட்டியில் நிகரகுவா, அவுஸ்திரேலியா மற்றும் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்கள் இறுதி மூன்று இடங்களுக்குள் நுழைந்தனர்.

குவாத்தமாலா நாட்டைச் சேர்ந்த மிஷேல் கான் மற்றும் கொலம்பியாவைச் சேர்ந்த மரியா கமிலா ஆகியோர் பிரபஞ்ச அழகிப் போட்டியில் பங்கேற்ற முதல் திருமணமான பெண்கள் ஆவர் என்பதும் கவனிக்கத்தக்கது. (04)

# மக்களின் உரிமைகளை சிதைக்கும் ஆளுநர் 3 ஆண்டுகள் என்ன செய்து கொண்டிருந்தார்?

## தமிழக அரசின் மனு குறித்து நீதிபதி கேள்வி

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக அடுக்கடுக்கான கேள்விகளை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு எழுப்பியுள்ளது.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க ஆளுநர் ஆர்.என். ரவிக்கு கால வரம்பு நிர்ணயம் செய்யவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ்நாட்டு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.



இந்த மனுவின் மீது கடந்த பத்தாம் திகதி விசாரணை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.வை. சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மக்களின் உரிமைகளை சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார் என்ற தமிழக அரசின் மனுவுக்கு ஆளுநரின் செயலாளர் பதிலளிக்குமாறு அறிவுறுத்தி வழக்கை இன்றைய திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு முன்பு இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசின் தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோத்தகி மற்றும் வில்சன் ஆகியோர் ஆஜராகினர்.

"எந்தக் காரணமுமின்றி மசோதாக்களை ஆளுநர் நிராகரித்துள்ளார். ஒவ்வொரு முறையும் ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றம் வந்துகொண்டிருக்க முடியாது" என்று தமிழக அரசுத் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பேசிய தலைமை நீதிபதி, "உச்சநீதிமன்றம் நவம்பர் 10ஆம் திகதி ஆளுநர் தரப்பு பதிலளிக்க பிறப்பித்த பிறகு மசோதாக்களை திருப்பி அனுப்பியது ஏன்? மசோதாக்களை ஆளுநர் திருப்பி அனுப்பியது தொடர்பான ஆவணங்கள் எங்கு உள்ளன? 3 ஆண்டுகளாக ஆளுநர் என்ன செய்து கொண்டிருந்தார்?" என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

மேலும், நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கு ஆளுநர் எப்போது ஒப்புதல் அளிப்பார்? என்றும், ஆளுநர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறியக் காத்திருப்பதாகவும் தலைமை நீதிபதி தெரிவித்தார்.

மசோதாக்கள் மீது பரிசீலனைகள் செய்ய வேண்டியுள்ளதால் அவகாசம் தேவை என்று ஆளுநர் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், வழக்கின் விசாரணையை வரும் 29 ஆம் திகதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது. (04)

# தேசியத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வளமான இளைஞர் சமூகத்தை உருவாக்கல்

## தென்கிழக்கு பல்கலையில் பயிற்சி நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசியத்தில் ஒற்றுமையினால் வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பயிற்சி நிகழ்வொன்று தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஸ்ரீலங்கா யுனைட்ஸ் அமைப்பினால் நிகழ்வொன்று கடந்த 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தொழிநுட்பப் பீட மாணவர்களின் பங்கு பற்றுதலுடன் மூன்று தினங்கள் இந்தப் பயிற்சிப் பாசறை இடம்பெற்றது. தலைமைத்துவப் பண்புகள், இனங்களுக்கிடையில் நல்லுறவை வலுப்படுத்தும் செயற்பாடுகள், ஏனைய சமயங்களின் கலை கலாசார விழுமியங்களை மதித்தல், நல்லொழுக்கம் போன்ற பல துறைகளில் தொழிநுட்பப் பீடத்தைச் சேர்ந்த 186 மாணவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

# காரைதீவைச் சேர்ந்த நிவேதிகா இராசையா திருமணமாகாத அழகு ராணியாக தெரிவு!




(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் முதலாவது திருமணமாகாத அழகு ராணியாக அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த செல்வி.நிவேதிகா இராசையா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கனடிய அமைப்பொன்று இலங்கையில் முதல் முதலாக இந்தப் போட்டியை கடந்த மூன்று மாத காலமாக நடத்தியது.

கொழும்பில் நடைபெற்ற இந்த தெரிவில் முதல் சுற்றில் 120 பெண்கள் நாடளாவிய ரீதியில் இருந்து கலந்து கொண்டனர். இறுதிச்சுற்றில் 15 பேர் தெரிவாகிப் போட்டியிட்டிருந்தனர்.

அதில் முதலாவது இடத்தில் நிவேதிகா இராசையாவும் இரண்டாவது இடத்தில் ஆச்சர்யா யோகராஜனும் மூன்றாவது இடத்தில் சந்திரகுமார் விதுர்ஷாவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கொழும்பில் இடம்பெற்ற விழாவில் தெரிவான அழகு ராணிகள் கிரீடம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

காரைதீவைச் சேர்ந்த செல்வி.நிவேதிகா இராசையா, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் செல்லையா இராசையாவின் புத்திரி என்பது குறிப்பிடத்தக்கது.




# தேசிய மட்டப் பரதநாட்டியப் போட்டியில் கொக்குவில் இந்து மாணவிகள் முதலிடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித்தினப் போட்டிகள் அநுராதபுரத்தில் இடம்பெற்றன.

இதன்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகளால் மேடையேற்றப்பட்ட பரத நாட்டியம் அனைவரது பாராட்டைப் பெற்றதுடன் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

# அழகியல் நடனப் போட்டியில் தேசிய மட்டத்தில் 3ஆம் இடம்



(ஹஸ்பர்)

அகில இலங்கை அழகியல் நடனப் போட்டியில் தேசிய மட்டத்தில் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் தப்பு நடனத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

அநுராதபுர மத்திய கல்லூரியில் இடம்பெற்ற தேசிய மட்ட அழகியல் நடனத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ள இவர்களை நெறிப்படுத்திய நடன ஆசிரியை திருமதி. யசோதினி குகாந்தன், இந்நடனத்தின் பாடல் ஆக்கம், இசையமைப்பு ஆசிரியர் இதயநேசன் , வாத்தியங்களை இசைத்த லோகிசன் மற்றும் வித்தியாலய அதிபர் திருமதி. தவவாசுகி ரமணன் ஆகியோரை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது.

# தேசிய மட்ட தமிழ்மொழித்தின போட்டிகளில் திருகோணமலை மாவட்ட பின்தங்கிய பிரதேச பாடசாலை மாணவர்கள் பிரகாசிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மட்ட அகில இலங்கைதி தமிழ் மொழித்தின கர்நாடக சங்கீதப் போட்டியில் திருகோணமலை விபுலானந்த கல்லூரி மாணவி செல்வி.அ. தனேஜா வயலின் தனி இசையில் முதலாம் இடத்தையும், மூதூர் கிளிவெட்டி மகா வித்தியாலய மாணவன் செல்வன் க.கபிலாஷ் வயலின் தனி இசை நிகழ்ச்சியில் பங்கு பற்றி இரண்டாம் இடத்தினையும், திருகோணமலை, சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய மாணவிகள் கவன் நடனத்தில் அகில இலங்கை ரீதியாக 3 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

இப்போட்டிகள் கடந்த வாரம் அநுராதபுரத்தில் இடம்பெற்றன.



# 2023 உலகக் கிண்ணம் - வென்ற ஆஸி. அணிக்கு ரணில் வாழ்த்து!

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியினர் வெற்றி பெற்றமைக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல தலைவர்கள் இந்த வாழ்த்துக்களைக் கூறியுள்ளனர்.

2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று (19) இடம்பெற்றது.

இந்தியாவின் அஹமதாபாத் - நரேந்திர மோடி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற குறித்த போட்டியில் அவுஸ்திரேலிய அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றது. இதற்கமைய, அந்த அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணி சார்பில் அதிகப்படியாக, கே.எல். ராகுல் 66 ஓட்டங்களையும், விராட் கோலி 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். விராட் கோலி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பெற்ற 72ஆவது அரைச் சதம் இதுவாகும். அத்துடன், கே.எல். ராகுல் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பெற்ற 17ஆவது அரைச் சதம் இதுவாகும்.

பந்து வீச்சில், அவுஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்டார்க் 55 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

அதனையடுத்து, 241 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 43 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் அதிகபடியாக, டிராவிஸ் ஹெட் 137 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இவர் பெற்ற 5ஆவது சதம் இதுவாகும்.

அத்துடன், மார்னஸ் லாபுசேன் 58 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இவர் பெற்ற 11ஆவது அரைச் சதம் இதுவாகும்.

பந்து வீச்சில் இந்திய அணியின் ஜஸ்பிரித் பும்ரா 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்த வெற்றியுடன் அவுஸ்திரேலிய அணி 6ஆவது முறையாகவும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, 1987, 1999, 2003, 2007 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் அவுஸ்திரேலிய அணி உலகக் கிண்ணத்தை வென்றிருந்தது. (அ)

# பத்து இலட்சம் மரங்களை நடவைத்தலும் பத்து இலட்சம் பேருக்கு விழிப்புணர்வும்

## தரம் 7 மாணவியின் காலநிலை மாற்ற உரை

(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் அவர்களின் வழிகாட்டலில் “காலநிலை மாற்றம்” சம்பந்தமாக சம்மாந்துறை அல்-அர்சத் மகாவித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி பயிலும் மின்மினி மின்ஹா என்ற மாணவியால் காலை ஆராதனையில் விழிப்புணர்வு உரை நிகழ்த்தப்பட்டது.

இவரது கருத்தும் தொனியும் பத்து இலட்சம் மரங்களை நடவைத்தலும், பத்து இலட்சம் பேருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தலுமாகும்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் றாசித் எஹியா, பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம் மற்றும் கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர் மற்றும் பிரதேச செயலகத்தின் சுற்றாடல் உத்தியோகத்தர்களும் ஏனைய பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# புலமைப்பரிசிலில் யாழில் முதலிடம் பெற்ற மாணவிக்கு மக்கள் வங்கி கௌரவிப்பு

புலமைப்பரிசில் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவிக்கு மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழக கிளையினர் கௌரவிப்பை வழங்கியுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி ஜெரால்ட் அமல்ராஜ் வனிஷ்கா 196 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்.

குறித்த மாணவியைச் சந்தித்த மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழக கிளையினர் இன்று (20) பாடசாலை அதிபர் மற்றும் யாழ் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் தமது கௌரவிப்பை வழங்கினர். (01)






# மியான்மர் ராணுவ வீரர்கள் திருப்பி அனுப்பிவைப்பு



அடைக்கலம் தேடி இந்தியாவில் தஞ்சம் புகுந்த மியான்மர் நாட்டைச் சேர்ந்த 29 ராணுவ வீரர்கள் தங்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

மியான்மரில் ராணுவ முகாமை 'மக்கள் பாதுகாப்புப் படை' என்னும் ஆயுதக் குழுவினர் கைப்பற்றியதால், அந்த முகாமைச் சேர்ந்த வீரர்கள் அடைக்கலம் தேடி இந்தியாவின் வடக்கிழக்கு மாநிலமான மிஸோரமில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த நவம்பர் 16 ஆம் திகதி மியான்மர் நாட்டைச் சேர்ந்த 29 ராணுவ வீரர்கள் மிசோரமுக்குள் நுழைந்தனர். இந்த நிலையில், மியான்மர் வீரர்கள் 29 பேரும் இன்று தங்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாக இந்திய பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வீரர்கள் மணிப்பூரில் உள்ள மோரேக்கு பாதுகாப்பு அதிகாரிகளால் விமானம் மூலம் அனுப்பப்பட்டனர். பின்னர் மோரேவிலிருந்து, அவர்கள் அருகிலுள்ள மியான்மர் நகரமான தமுவுக்குச் சென்றனர் என்று அந்த அதிகாரி கூறினார்.

இத்துடன் இந்தியாவுக்குத் திரும்பிய மொத்தம் 74 மியான்மர் ராணுவ வீரர்கள், தங்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (04)

# கற்பிட்டி ரஹ்மானியா அரபுக் கல்லூரியின் புதிய மாணவர் அனுமதி - 2024


(கற்பிட்டி - எம்.எச். எம் சியாஜ்)

சிறந்த அறிவும் மார்க்க பற்றும் உள்ள ஆலிம்களை உங்கள் வீடுகளில் இருந்தே உருவாக்குவோம் - எனும் நோக்கத்தில் கற்பிட்டி நகரில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் ரஹ்மானியா அரபுக் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதன.

ஹிப்ழு பிரிவிற்கு 12 வயதிற்கு உட்பட்டவர்களையும், கிதாப் பிரிவிற்கு 13 வயதிற்கு மேற்பட்டவர்களையும் சேர்த்து கொள்வதற்கான விண்ணப்பம் முடிவு திகதி நவம்பர் 30 ஆகும்.

புத்தளம் மாவட்ட மாணவர்களுக்கு டிசம்பர் 2ஆம் திகதி காலை 9 மணிக்கும், ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு டிசம்பர் 3ஆம் திகதி காலை 9 மணிக்கும் நேர்முகத் தேர்வுகள் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளன.

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் 071 970 92 50, 072 700 29 28 ஆகிய இலக்கங்களைத் தொடர்புகொள்ளுமாகு கோரப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2023இல் வெளியிடப்பெற்றது.